DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THOOTHUKUDI.

| | | |
|---|---|---|
| Calendar | ... | DEPOSITION OF WITNESS |
| Miscellaneous (Chapte.. | | |
| Preliminary Register | ... | Case No. S.C. No.41 /2019 |
| Sessions | ... | |
| Deposition of witness for | | Prosecution - P.W. 15<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | டாக்டர் ராஜா |
| Father's Name | த/பெ சுப்பையா |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 43 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.12.2021.

**முதல் விசாரணை :–**

நான் தற்போது திருநெல்வேலியில் KS மருத்துவ மையத்தில் அறுவை சிகிச்சை நிபுணராக பணிபுரிகிறேன். இதற்கு முன்பு நான் திருநெல்வேலி, வண்ணாரபேட்டையில் உள்ள ராஜா மருத்துவமனையில் அறுவை சிகிச்சை நிபுணராக பணிபுரிந்தேன். மேலும் அதே மருத்துவமனையில் எனது தகப்பனார் மருத்துவ பேராசிரியர் சுப்பையா தலைமை அறுவை சிகிச்சை நிபுணராக பணிபுரிந்தார். எனது தகப்பனார் கடந்த 13.09.2017 ம் தேதி இறந்துவிட்டார். எனது தகப்பனாரின்

கையெழுத்து மற்றும் கையொப்பம் ஆகியன எனக்கு நன்கு பரிட்சயம் ஆகும். மேலும் இவ்வழக்கு சம்மந்தப்பட்டவருக்கு எனது தகப்பனார் சிகிச்சை அளித்தபோது அவருக்கு நான் உதவி மருத்துவராக பணிபுரிந்ததால் இவ்வழக்கு சம்மந்தப்பட்டவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்து எனக்கும் தெரியும். அதனடிப்படையில் தற்போது நான் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 06.01.2014 ம் தேதி நானும், எனது தகப்பனாரும் ராஜா மருத்துவமனையில் பணியில் இருந்தபோது அன்று இரவு சுமார் 9.30 மணியளவில் சுமார் 29 வயதுள்ள சமுத்திரம் என்ற சமுத்திரபாண்டி என்பவரை பரத் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை எனது தகப்பனார் பரிசோதித்தபோது சமுத்திரம் என்ற சமுத்திரபாண்டி சுயநினைவுடன் இருந்தார், ஆனால் அவர் அபாய கட்டத்தில் இருந்தார். அவருடன் வந்த பரத் அவர் அன்று மாலை சுமார் 4.30 மணிக்கு கத்தியால் (Sickle) தாக்கப்பட்டதாக கூறினார். அவரை எனது தகப்பனார் பரிசோதித்தபோது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன. 1. தலையின் வலது பக்கம் பலதரப்பட்ட வெட்டுக்காயம் இருந்தது. 2. தலையின் வலது முன்பகுதியில் எலும்பு முறிவு காணப்பட்டது. 3. பலதரப்பட்ட வெட்டுக்காயங்களானது முகத்தின் இருபுறமும் இருந்தது. 4. வலது கையில் எலும்பு முறிவு இருந்தது. 5. வலது காலில் எலும்பு முறிவு இருந்தது. 6. பலதரப்பட்ட வெட்டுக்காயங்கள் இரண்டு கைகளிலும், கால்களிலும் காணப்பட்டன. அவரை உள்நோயாளியாக அனுமதித்து அவருக்கு வலதுபக்க தலை, வலதுகால் ஆகியபகுதிகளுக்கு எனது தகப்பனார் சிகிச்சை அளித்தார். சிகிச்சைக்கு பின்பு 24.01.2011 ம் தேதி இரவு 9.00 மணிக்கு மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார். சிகிச்சையின் முடிவில் அவருக்கு ஏற்பட்ட வலதுபக்க

தலை மற்றும் வலதுகால் காயங்கள் கொடுங்காயங்கள் என்று எனது தகப்பனார் சான்று வழங்கியுள்ளார். தற்போது என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேட்டு நகல் எனது தகப்பனார் சுப்பையா வழங்கிய விபத்து பதிவேட்டு நகல் ஆகும். விபத்து பதிவேட்டு நகல் அ.சா.ஆ–12 ஆகும். இவ்வழக்கு சம்பந்தமாக எனது தகப்பனாரை போலிசார் விசாரித்த விவரம் எனக்குத் தெரியும்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–**

எதிரி தரப்பிற்கு குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

(Sd/Thiru. R. Selvakumar)
Chief Judicial Magistrate,
Thoothukudi.